திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு 1000க்கும் மேற்பட்டோருக்கு நலஉதவிகள் வழங்கினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், சு.ராஜாங்கம், சி.சண்முகம், குட்டி புகழேந்தி, பா.ஷெரீப், மண்டி பிரகாஷ், பி.ஆர்.நாகராஜ், எம்.வெங்கடேஷ் உட்பட பலர் உள்ளனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பெரும்புதூர் நகர தி.மு.க. சார்பில் நகரச் செயலாளர் இரா.சதிஷ் குமார் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான அ.ராசா எம்.பி. சிறப்புரையாற்றினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் படப்பை ஆ.மனோகரன், ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, இ.மணி, கோ.சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தொழிலாளர்களுக்கு விரோதமாக ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ள

நாசகார 4 தொகுப்புச் சட்டங்களை திரும்பப் பெற வேண்டும்!

தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, நவ.30–

தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

ஒன்றிய அரசு 4 ஆண்டுகளுக்கு முன்பாக நாடாளுமன்றத்தில் எவ்வித விவாதமும் இல்லாமல் நிறைவேற்றிய 4 தொகுப்பு சட்டங்களை தற்பொழுது அமலுக்கு கொண்டு வந்துள்ளது கண்டனத்திற்குரியதாகும்.

இந்தியத் திருநாட்டின் அரசியல் சாசனத்தில் தொழிலாளர் நலன் என்பது ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளது. ஒன்றிய அரசு எந்தவொரு சட்டம் இயற்றப்பட்டாலும் மாநில அரசு அதை ஏற்றுக் கொண்டு அதற்குரிய விதிகள் உருவாக்கப்பட்டால்தான் நடைமுறைபடுத்த முடியும். இந்தியாவில் 4 மாநிலங் களைத் தவிர மீதமுள்ள மாநிலங்களும் இந்த 4 தொகுப்பு சட்டங்களை ஏற்று அதற்குரிய விதிகள் உருவாக்கவில்லை. அதற்குப் பதிலாக தங்கள் எதிர்ப்பை பகிர்ந்து உள்ளனர். அரசியல் சாசனத்திற்கு மாறாக சர்வாதிகார முறையில் மாநிலங்களுக்கு இந்தச் சட்டத்தை திணிப்பது, மாநில உரிமையைப் பறிப்பதோடு, தொழிலாளர் விரோத நடவடிக்கையை ஒன்றிய அரசு துணிந்து செய்துள்ளது.

இரண்டாவது தொழிலாளர் ஆணையம் பரிந்துரையின் பேரில் இந்த 4 தொகுப்பு சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்தப் பரிந்துரை என்ன என்று பார்ப்போமானால் 1. ஒவ்வொரு சட்டத்திலும் ஒவ்வொரு பொருள்பட உள்ள சட்டத்தின் பிரிவுகளை ஒருங்கிணைத்து தொழிலாளர்களுக்கு நலன் பெறச் செய்யும் முறைப்படுத்த வேண்டும் என்பதாகும். 2. பல்வேறு சட்டங்களை ஒருங்கிணைத்து அதனை தொழிலாளர்களுக்கு புரியும்படி அதனுடைய உணர்வுகள் மாறாமல் எளிமைப்படுத்த வேண்டும். 3. சட்டங்களை ஒருங்கிணைப்பதின் மூலம் தொழில் தகராறுகள் தீர்வை எளிமையாக்கி அதன் மூலம் தொழிலாளர்கள் பயன்பெற செய்ய வேண்டும்.

ஆனால் அந்த ஆணையம் எந்தவொரு இடத்திலும் தற்போது உள்ள சட்டங்களை திருத்தவோ, அல்லது மாற்றம் செய்யவோ கூறவில்லை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஆக, இரண்டாவது தொழிலாளர் ஆணையத்தினுடைய பரிந்துரைக்கு முரணாக இந்த தொகுப்பு சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

தற்போது நடைமுறையில் உள்ள 44 சட்டங்களில் 15 சட்டங்களை நீக்கி விட்டார்கள். அவை அனைத்தும் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட சட்டங்களாகும். மீதமுள்ள 29 சட்டங்களை 4 தொகுப்புகளாக உருவாக்கியிருக்கிறார்கள். அதில் 1. தொழில் உறவு சட்டத் தொகுப்பு. 2. ஊதியம்

வழங்கும் சட்டத் தொகுப்பு. 3. சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பு. 4. தொழிலாளர் பணியிட பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தொகுப்பாக உருவாக்கப்பட்டுள்ளன.

தொழில் உறவு சட்டத் தொகுப்பு – இந்த சட்டத் தொகுப்பில் தொழிற் சங்கப் பதிவு சட்டம் 1926ஐ பல இடங்களில் திருத்தம் செய்து கொண்டு வரப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் 7 பேர் ஒன்று சேர்ந்தால் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க தொழிற் சங்கம் தொடங்கலாம் என்ற உரிமைகளை பறிக்கின்ற வகையில் தொழிற்சங்கத்தை பதிவு செய்திட 10 சதவிகித தொழிலாளர்கள் அல்லது 100 பேர் இதில் எது குறைவோ இந்த எண்ணிக்கை இருத்தல் வேண்டும் என்ற ஒரு புதிய கட்டுப்பாட்டை ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது. தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தை தொடங்கும்போது அவர்களுக்கு உதவிகரமாக தொழிற் சங்கத் தலைவர்கள் அந்த சங்கங்களில் இடம் பெறுவது தடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கங்களுக்குள் ஏதேனும் தகராறு ஏற்பட்டால் அந்தப் புகாரின் அடிப்படையில் தொழிற்சங்கத்தை கலைத்து விடுவதற்கு உரிய அதிகாரம் தொழிலாளர் நல அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தொழிற்சங்கங்களுக்கு இடையே உள்ள போட்டியில் தொழிற்சங்க உரிமை பறிபோவதற்கான வாய்ப்புகள் புதிய சட்டத் தொகுப்பில் உருவாக்கப் பட்டுள்ளது. அமைப்புசாரா தொழிலாளர்கள் அவர்கள் உருவாக்கும் தொழிற்சங்கத்தை அவர்களுக்கு உதவிடும் வகையில் தொழிற் சங்கத் தலை வர்கள் தலைமை தாங்கும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலை என்பது (பெங்களூர் வாட்டர் சப்ளை கார்ப்பரேஷன் Vs தொழிற்சங்கம்) நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் தொழில்களாக அமைய வேண்டும். ஆனால் தர்ம ஸ்தாபனங்கள் மற்றும் சேவை புரியும் தொழிற் சாலைகள் சட்டத் தொகுப்புபடி தொழிற்சாலையாக கருதப்படமாட்டாது என்பது அதில் பணிபுரியும் தொழிலாளர்களை பாதிப்புக்குள்ளாக்கும்.

தொழிற்தகராறு என்பது ஒரு தொழிலாளிக்கும் மற்றொரு தொழிலாளிக்கும் ஏற்படும் தகராறுகள் அல்லது ஒரு தொழிற்சங்கத்திற்கும் இன்னொரு தொழிற்சங்கத்திற்கும் ஏற்படும் தகராறுகள் அல்லது ஒரு தொழிற்சங்கத்திற்கும் அல்லது தொழிலாளிக்கும் இடையே நிர்வாகத்துடன் தகராறு ஏற்பட்டால் அது தொழிற்தகராறு என கருதப்படும். ஆனால் தற்போது உள்ள தொகுப்பு சட்டப்படி தொழிலாளிக்கும் நிர்வாகத்திற்கும் ஏற்படுகின்ற தொழிற் தகராறு ஆகக் கருதப்படுவது அந்தத் தொழிலாளி என்பதை தொழிலாளி /பணியாளர் என பலவிதமான பெயர்களை அளித்து வியாக்கியானங்கள் செய்யப்பட்டு அந்தத் தொழிற் தகராறு என்பது பாதிப்புக்குள்ளாகும். இது நிர்வாகத்திற்கு சாதகமாக அமையும். தொழிலாளி (Worker) மற்றும் பணியாளர் (Employee) என பெயர் மாற்றம் செய்து வேறு எந்த வகையிலும் அழைத்தாலும் அதை தொழிற் தகராறுக்குள் கொண்டு வராமல் செய்வதற்கு உண்டான வாய்ப்புகள் உருவாகியுள்ளது.

ஒரு தொழிலாளியோ, அல்லது தொழிற்சங்கமோ தொழிற்தகராறை எழுப்பிசமரசஅலுவலர்முன்பாகவோ அதன் பின் உரிமையியல் நீதிமன்றம், தொழிலாளர் நீதிமன்றத்திற்கு செல்லக் கூடிய வாய்ப்புகள் இருந்தது. ஆனால் இவை முற்றிலும் மாற்றப்பட்டு ஒற்றைத் தீர்ப்பாயம் என்பதை இந்தத் தொகுப்பு கூறுகிறது. தொழிற்தகராறு எழுப்புவதில் சிக்கலும் பாதிப்பும் ஏற்படும். மேலும் தற்போது உள்ள தொழிற்தகராறு சட்டத்தில் ஒப்பந்தங்கள் மீறல்கள், சட்ட மீறல்கள் இவைகளுக்கான பிரச்சினை களுக்கு தீர்வு காண்பதற்கு பல்வேறு வழிவகைகள் உள்ளது. ஆனால் புதிய தொகுப்பு சட்டத்தில் அந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளன.

குறைந்தபட்ச ஊதியம் சம்மந்தமாக 15வது தொழிலாளர் மாநாட்டில் ஒப்புக் கொண்டதற்கு மாறாகவும் உச்ச நீதிமன்றம் ரெப்டகளஸ் மற்றும் மத்திய அரசு வழக்கில் வழங்கிய தீர்ப்புக்கு மாறாகவும், தொழிலாளர்களின் வாழ்க்கை தேவை களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு உதவாத வகையில் தன்னிச்சையாக தேசிய குறைந்தபட்ச ஊதியம் (NLMW) என்பது இத்தொகுப்பு சட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளது. இது தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள தேவையான குறைந்தபட்ச ஊதியத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது.

இந்தப் புதிய தொகுப்பு சட்டத்தில் தொழிலாளி மற்றும் பணியாளர் என பாகுபடுத்துவதோடு மட்டுமல்லாமல், ரூ. 18 ஆயிரத்துக்கு மேல் ஊதியம் பெற்றால் மேற்பார்வையாளராக கருதப்படுவார். தொழிலாளி பணியாளர் என்ற வரம்பிற்கு வெளியே தள்ளப்படுவார். இது மேற்பார்வையாளர் தகுதி சம்மந்தமாக உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு முரணானது. ஊதியம் மட்டுமே ஒருவரை மேற்பார்வையாளர் என கருதுவது கேலிக்குரியது.

நடைமுறையிலுள்ள சட்டப்படி 100 மற்றும் 100க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தால் தற்காலிகமாக பணியிலிருந்து நிறுத்தி வைப்பது (Lay Off) ஆட்குறைப்பு செய்வதற்கு (retrenchment) மற்றும் ஆலை மூடல் (Closure) போன்றவைகளுக்கு அரசின் அனுமதி பெற வேண்டும் என்று இருந்ததை 300 தொழிலாளர்கள் வரை பணிபுரியும் ஆலைகளில் வேலையை நிறுத்துவதற்கு, ஆட்குறைப்பு செய்வதற்கு மற்றும் ஆலை மூடலுக்கு அரசின் அனுமதி தேவையில்லை என மாற்றப்பட்டுள்ளது. இது இந்திய தொழிலாளர்களின் சுமார் 80 சதவிகிதம் பேர் 300க்கும் குறைவான தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகளில் உள்ளனர். இவர்கள் சட்டப் பாதுகாப்பற்றவர்களாக மாற்றப்படுவார்கள்.

வேலைநிறுத்தம் தொழிலாளர்களின் அடிப்படை உரிமை என தொழிற் சங்கங்கள் பேசி வரும் நிலையில் வேலைநிறுத்தத்திற்கு 15 நாட்களுக்கு முன் அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பதை 60 நாட்களுக்கு முன்னதாக கொடுக்க வேண்டும் என மாற்றப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவை நிறுவனம் உட்பட அனைவரும் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுக்க வேண்டுமென மாற்றப்பட்டுள்ளது.

இந்த புதிய தொகுப்பில் வேலை நேரம் என்பது 8 மணி நேரம் என தெரிவித்து விட்டு வேலை நேரத்தை சம்மந்தப்பட்ட மாநில அரசுகளே முடிவு செய்யலாம் என்பது 8 மணி நேர வேலை, 8 மணி நேர உல்லாசம், 8 மணி நேர உறக்கம் என்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இணக்க விதிகளுக்கு முரணானது.

புதிய தொகுப்புச் சட்டத்தில் மிகை நேர பணி (Over time) சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. இது தொழிலாளர்களின் விருப்பத்தின் பேரில் செய்யலாம் என்பது பெரு முதலாளிகளுக்கு சாதகமானது. தொடர்ச்சியாக தொழிலகத்தில் தொடர்ந்து பணியிடத்தில் 5 மணி நேரத்திற்கு மேல் பணி செய்தால் அரை மணி நேர இடைவெளி விட வேண்டும் என்பது முந்தைய சட்டத்தில் உள்ளது. தற்போதைய தொகுப்பு சட்டத்தில் 8 மணி நேரம் பணி இடத்திலிருக்க வேண்டுமென் கிற அபாயத்தை உண்டு பண்ணுகிறது.

இத்தொகுப்பு சட்டம் கால நிர்ணயத்துடன் கூடிய வேலையை (Fixed Term Employment) முறையை புகுத்தியுள்ளது. இந்த முறையில் வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளி காலவரம்பு முடிந்தவுடன் எவ்வித அறிவிப்புமின்றி பணியில் இருந்து விலக்கப்படுவார். அவ்வாறு விலக்கப்பட்டவர் தொடர்ந்து பணி செய்ய உரிமை கோரவோ அல்லது பணி நிரந்தரம் கோரவோ, தொழிற் தகராறு எழுப்பவும் மற்றும் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாது என்ற நிபந்தனை உள்ளது.

இன்னும் புதிய தொகுப்பு சட்டங்களில் பெண் தொழிலாளர்களை இரவு நேர வேலைக்கு அனுமதிப்பது, ஒப்பந்தத் தொழிலாளர் முறையை சட்டபூர்வ மாக்குவது, ஒப்பந்தத் தொழிலாளர் வைத்துள்ள நிறுவனம் உரிமம் பெறு வதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் பெறும் ஊதியத்தில் பல்வேறு அம்சங்கள் ஊதியமாக கணக்கிடப்படாது என்பது கண்டனத்திற் குரியது.

இந்திய தொழிலாளர் மாநாட்டில் விவாதிக்கப்படாமலும், நாடாளு மன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லாத நிலையிலும் விவாதங்கள் இன்றியும், மாநில அரசுகளிடம் முறையாக கலந்தா லோசிக்காமலும் அவசர கதியில் பெருமுதலாளிகளுக்கு சாதகமாக கொண்டு வரப்பட்ட இத்தொகுப்பு சட்டங்களை திரும்பப் பெற வேண்டுமென தொ.மு.ச. பேரவை சார்பாக வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

துணை முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு மாதவரம் பகுதி 17வது வட்டம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ந.பரந்தாமன் தலைமையில் பகுதி அவைதலைவர் வி.திராவிடவீரன் கழக கொடியை ஏற்றினார். எஸ்.தேவராஜ் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார். எம்.எஸ்.ஆர்.சேகர்ராஜன், ஏற்பாட்டில் 300 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் என்.சந்திரன், ஆர்.கௌரிசங்கர்லால், பகுதி பிரதிநிதிகள் கே.ராஜா, எஸ்.சுகேந்திரேன், பி.என்.குமார், துணை செயலாளர்கள் டி.ஸ்டாலின், பி.லதாபிரகாஷ், எஸ்.பார்த்தசாரதி, வழக்கறிஞர் ப.கருணாநிதி, பி.அருண்ராஜ், ஆர்.விஸ்வநாதன், ஏ.எஸ்.மாரி, பி.அயோதியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! தி.ஜெயக்குமார் தலைமை!

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாபெரும் இரத்ததான முகாம்!

தாட்கோ தலைவர் நா.இளையராஜா துவக்கி வைக்கிறார்!

சென்னை, நவ. 30 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், எழும்பூர் வடக்கு பகுதியில், மனிதநேய உதயநாளை முன்னிட்டு - மாபெரும் இரத்தான முகாமை - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், தாட்கோ தலைவர் நா.இளையராஜா அவர்கள் துவக்கி வைக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், எழும்பூர் வடக்கு பகுதியில், மனிதநேய உதயநாளை முன்னிட்டு "உதயம் 16", இரத்தம் கொடுப்போம் உயிர் வாழ! நித்தம் உழைப்போம் கதிர் ஆள எனும் தலைப்பில், மாபெரும் இரத்தான முகாம் இன்று (30-11-25 ஞாயிற்றுக் கிழமை) அன்று காலை 9.00 மணியளவில், சென்னை, பட்டாளம், டிமலஸ் சாலை, ஸ்ரீ தட்சணாமூர்த்தி திருமண மஹாலில் நடைபெறுகிறது.

இரத்ததான முகாமில், எழும்பூர் வடக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தி.ஜெயக்குமார் தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, வானவில் விஜய், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன் எம்.சி, கோ.மணி, க.விநோத், புரசை .தாமோதரன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, க.நந்தீஸ்வரன், அ.நிர்மலா தேவி, எல்.சுந்தர் ராஜன் எம்.சி, கே.கோகுல், சமதி புத்தநேசன் எம்.சி முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, சே.பாலாஜி, பா.பிரபாகரன், என்.ஜெ.மதன்கமார் ஆ.அஜித்குமார் (எ) ஜெபா, ஏ.ஆர்.யாசர், இ.பி.கார்த்திக், பி.டில்லிகணேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் இரத்ததான முகாமை கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், தாட்கோ தலைவர் நா.இளையராஜா துவக்கி வைக்கிறார்.

மேலும் இம்மருத்துவ முகாமில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், தயாநிதிமாறன் எம்.பி, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பரிதிஇளம்சுருதி எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, பி.எம்.யாழினி. மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன், எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், சங்கரிநாராயணன், பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, கவிஞர்நண்மாறன், ஆர்.வரதன். மாவட்ட கழக நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத். கே.விக்னேஷ், த.விஜயராஜ், ப.குமரன், ந.அஜித்குமார், டி.கே.ஆனந்த்ராஜ், ஜெ.தங்கராஜ், பி.தேவேந்திரன், பி.செந்தில்குமார், அ.சிவகுமார், கா.ராஜாத்தி, மகிபதி, வி.விஜயகுமார், எப்.ரகமதுல்லா, ஜி.பசுபதி, ப.அன்பரசு, எம்.சங்கர், ரவிக்குமார், ராஜன், பன்னீர்செல்வம், கமல்ராஜ், சேகர், ஆர்.பாலாஜி, நி.தெய்வாணை, கலைவாணி, ம.ஷீலா, ம.இளவழகி, கரு.எழிலரசி, கோ.ஜானகி, ஜெ.பானுமதி, த.மாலதி, பா.புவனேஸ்வரி, டே.ஜெயந்திஜெனிபர், இரா.மாலதி, நெ.சசிகலா, செ.சத்யா, இரா.அம்மு, அ.உஷாராணி, கி.சத்யவாணி, ஜா.ஜமீளாகத்தூன், கோதேவிகலா, ம. முனியம்மாள், ஜெ.அண்ணம், மு.சரஸ்வதி, பா.செல்லம்மாள் ப. இராஜேஸ்வரி, பா.புஸ்பலதா, இரா.அனிதா, பா.சாந்தி, அலி.ஹோசின், ச.ஜெயலட்சுமி, சு.கணபதி [எ] லத்தீப், சு.பாலமுருகன், மெக்கானிக்சேகர், கி.சத்திய நாராயணன், கி.நவீங்குமார், ரா.பாரத், ந.லஷ்மன், ந.உதயகுமார், ப.சரவணன், இ.உமாசங்கர், பெ.வெங்கடேஷ், எம்.அருண், டி.பி.விக்னேஷ், பி. சாந்தகுமார், ஏ.சம்பத்குமார், பி.ரமேஷ், வி.திவாகர், ஜி.சுரேஷ், எம்.சீனிவாசலு, டி.கிரண்பாபு மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்டச் செயலாளர் வி.அபாய், தி.தயாளன் ஆகியோர் நன்றி கூறுகிறார்.

முன்னாள் மகளிர் அணிச் செயலாளர் இராஜம் ஜான் மறைவு!

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அஞ்சலி!

நெல்லை, நவ.30-

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி விக்கிரமசிங்கபுரத்தில் வசித்து வந்த கழக மகளிர் அணி முன்னாள் செயலாளர் இராஜம் ஜான் (வயது 69) அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக 24.11.2025-திங்கட்கிழமை அன்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் மறைந்த ராஜம் ஜான் அவர்களின் குடும்பத்தினருக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் ஆறுதல் கூறினார்கள்.

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி விக்ரம சிங்கபுரத்தில் வசித்து வந்த மறைந்த ஜான் அவர்களின் மனைவியும் கழக மாநில மகளிர் அணி முன்னாள் செயலாளருமான இராஜம் ஜான் அவர்கள்

உடல் நலக்குறைவு காரணமாக அன்னாரது இல்லத்தில் 24.11.2025 அன்று இயற்கை எய்தினார். இராஜம் ஜான் அவர்கள் கழக மகளிர் அணி செயலாளராக பணியாற்றியபோது நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் பகுதியில் பல இடங்களில் மகளிர் அமைப்புகளை நிறுவி மகளிர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் துணிவோடு போராடியதோடு, கழகப் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர். கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர். இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம், இரயில் மறியல் போராட்டத்தி லும் கலந்து கொண்டவர்.

தொடர்ந்து தற்போது வரை கழகம் அறிவித்த மாவட்ட அளவிலான ஆர்ப்பாட்டங்கள், கழக சாதனை விளக்க பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு சிறப்பித்தவரா வார். இப்படி கழகத்திற்காக அயராது உழைத்து வந்த கழக மகளிர் அணி முன்னாள் செயலாளர் இ.ராஜம்ஜான் அவர்கள் விக்கிரம சிங்க புரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, கழக மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், குழந்தைகள் நல ஆணைய தலைவர் புதுக்கோட்டை விஜயா, முன்னாள் எம்பி ஞானதிரவியம், மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், நெல்லை துணை மேயர் ராஜு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மல்லிகா அருள், ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர், முத்துப்பாண்டி என்ற பிரபு, எரிக்ஜூடு, விக்கிரமசிங்கபுரம் நகர செயலாளர் கணேசன், ஆலங்குளம் ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன், உள்பட கழகத்தினர், உள்ளாட்சிப் பிரதிநிதி கள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ராஜம் ஜான் அவர்களுக்கு வினு என்ற ஆரோக்கியராஜ் என்ற மகனும், பிந்து என்ற மகளும் உள்ளனர்.

அன்னாரது இறுதிச் சடங்கு நேற்று (25ஆம் தேதி) நடைபெற்றது. பின்னர் திருஇருதயகுளம் கல்லறை தோட்டத்தில் அன்னாரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆர்.எம்.மணிகண்டன் நிகழ்ச்சி ஏற்பாடு! தலைமை ஆர்.டி.மதன்குமார்!

இளைஞர் எழுச்சி நாள்: உணவு - நலத்திட்ட உதவிகள்!

திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் வழங்கினர்!

சென்னை, நவ.30-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.மணிகண்டன் ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் தலைமையில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் விம்கோ நகர் அருகில் அமைந்துள்ள REHOBOTH முதியவர் இல்லத்தில் மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி ஜி ஆர் மணிவண்ணன் காந்தி நகர் கிராம தலைவர் எஸ்.செல்வம் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் மணலி எஸ்.ஸ்டாலின் திருவொற்றியூர் கிழக்கு பகுதி துணை அமைப்பாளர்கள் கே.டி.ஆர். பாலமுருகன் எம்.கார்த்திக் கே.பி.எஸ்.ரஞ்சித் வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.தர்மேஷ்குமார் என்.கவிபாரதி ஹரிஸ் வெங்கட் ஐசக்சாமுவேல் மற்றும் கழக இளைஞர் அணி தோழர்கள் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பூவிருந்தவல்லி நகர திமுக இளைஞரணி சார்பில் கரையான்சாவடி டான் குவனெல்லா சிறப்பு பள்ளியில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் நகர அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனிப் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி மாணவர்களுடன் கேக் வெட்டி கொண்டாடி மதிய உணவு வழங்கினார் உடன் காயத்திரி ஸ்ரீதர், காஞ்சனா சுதாகர், க.ஸ்ரீதர், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர் மன்னன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், ப.அன்புபகன், இரா.புண்ணியகோட்டி, பி.சௌந்தரராஜன், ஷாஜகான், விமல் ஆனந்த், இ.யுவராஜ், ஆர்.சத்தியா, செ.சபரிஷ், யு.நிஜாம், பெ.தமிழ்செல்வம், க.ஜெய், வி.தினேஷ் பாபு, மற்றும் பலர் உள்ளனர்